RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s1415

# கம்பராமாயணக் காப்பிய நகர்வில் பெண் ஆளுமை

**சி. முத்துச்செல்வி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி, சிவகாசி-626124, தமிழ்நாடு, இந்தியா.

# Competence of Women in the Plotline of Kambaramayanam

**C. Muthuchelvi** [a, *]

[a] Department of Tamil, Ayya Nadar Janaki Ammal College, Sivakasi-626124, Tamil Nadu, India

* Corresponding Author: cmuthuchelvi@gmail.com

Received: 26-11-2021
Revised: 01-09-2022
Accepted: 20-09-2022
Published: 29-11-2022

Check for updates

**ABSTRACT**

Women inherently are considered to be more compassionate than being haughty or autocratical. They would go to the extent of forsaking their wishes, in case they cause any inconvenience to others. The three important female characters in kambaramayana ie. kaikeyi, mandharai and soopanagai respectively would tell otherwise. These characters are automatic, unlike the stereotypical female characters. This research paper would study the power and competence of the three female characters (Kaikeyi, Mandharai and soorpanagai) with reference to the plotline of kambaramayanam.

**Keywords:** Competence, Kambaramayanam, Kaikeyi, Mandharai, Soorpanagai

## முன்னுரை

ஆளுமை என்பது ஒருவரின் ஒழுங்கமைந்த, இயங்கியல் பண்புகளும், அவை தோற்றுவிக்கும் தோரண நடத்தைகள், உணர்வுகள், சிந்தனைகளைக் குறிக்கிறது. பொது வழக்கில் ஆளுமை என்பது ஒருவரின் வெளித்தோற்றத்தைப் பெரிதும் குறிக்கிறது. ஆளுமை என்பதைச் சுருக்கமாக சொல்வதென்றால் ஒருவரைத் தனித்துவமானவராக ஆக்கும் எண்ணங்கள், உணர்வுகள், நடத்தைகள், என்பவற்றாலான ஒன்று என வரையறுக்கலாம். அத்துடன் ஆளுமை ஒருவரின் உள்ளிருந்து உருவாகி அவருடைய வாழ்க்கைக் காலம் முழுதும் சீராக அமைகின்றது.

## மந்தரையின் ஆளுமைத் தன்மை

கம்பராமாயணம் என்னும் காப்பிய நகர்வில் முதல் பிள்ளையார் சுழி போடுபவளே மந்தரை என்னும் பெயருடைய கூனிதான். இராமன் சிறுவயதில் மண் உருண்டைகளை கூன் முதுகில் எறிந்ததை மனதில் வஞ்சனையாக வைத்து தக்க நேரத்தில் கைகேயி மனதில் குழப்பத்தை ஏற்படுத்தி ராமனின் மணிமுடி பறித்து அவன் வனவாசம் செல்லுவதற்கும், கம்பராமாயணம் எனும் மாபெரும் காவியம் தோன்றுவதற்கும் காரணமாக இருப்பவள் கூனிதான். கூனியின் ஆளுமைத் தன்மைதான், கம்பராமாயண கதைநகர்விற்கு அடிப்படையாகத் திகழ்கிறது. என்பதை எடுத்துரைக்கும் விதமாக,

“அரசரிற் பிறந்துபின் னரசரில் வளர்ந்து
அரசரிற் புகுந்துபே ராசியான நீ
கரைசெயற் கருத்துயர்க் கடலில் வீழ்கின்றாய்

உரைசெயக் கேட்கிலை யுணர்தி யோவென்றான்"

கைகேயியின் மனதை மாற்றும் முயற்சியில் மந்தரை தீவிரமாக ஈடுபடுகின்றாள் (Ramasubramaniam, 2005). அரசகுலத்தில் பிறந்து, அரசியலிலேயே வளர்ந்த நீ உன் மகனுக்கு அரசாட்சியைப் பெறாமல் இருப்பது பின்னாளில் உனக்குப் பெருந்துயரை ஏற்படுத்தும் எனக் கூறுகின்றாள். மந்தரையின் கொடுஞ்சொற்கேட்டுக் கைகேயி சினந்து கூறுவதோடு கடுஞ்சொற்களால் ஏசுகின்றால் அதனை,

"வாய்க யப்புற மந்தரை வழங்கிய வெஞ்சொல்

காய் கனற்றலை நெய்சொரிந் தெனக்கதங் கனற்றக்

கேக யர்க்கிறை திருமகள் கிளரிளவரிகள்

தோய்க யற்கண்கள் சிவப்புற நோக்கினாள் சொல்லும்"

என்ற பாடலால் அறியமுடிகிறது (Ramasubramaniam, 2005).

இதே கருத்தை கவிஞர் வாலி எடுத்துரைக்கையில்,

"கூனியின் கோணல் பேச்சைக்

கேட்டு அவளைக்

கைகேயி வைதாள்

நிறுத்தடி உன்

நீலிக் கண்ணீரை

கழிநீர் என்று கூறுகிறாய்

கைமணக்கும் பன்னீரை"

என்ற நிலையில் உள்ள கைகேயியின் மனதை மாற்றம் அடையச் செய்யமுயலுகிறாள் கூனி (Adhithar, 2007). தான் நினைத்து வந்த காரியத்தை நிறைவேற்ற வேண்டும் என்னும் நோக்கில்,

"கொடுத்தொ ழிந்தனை யுனக்கரும் புதல்வனைக் கிளர்நீர்

உடுத்த பாரக முடையவ னொருமகற் கெனவே

கொடுத்த பேரரசவன்குலக் கோமைந்தர் தமக்கும்

அடுத்த தம்பிக்கு மாம்பிறர்க் காகுமோ வென்றாள்"

என்ற வரிகளளால் மந்தரை தன் உள் மன எண்ணச் சிதறல்களை கைகேயியின் மனதினுள் புகுத்தி கைகேயியின் மனதை மாற்றுவதன் மூலமாக தனது ஆளுமையை நிலைநிறுத்திக் கொண்டமையை அறியமுடிகிறது (Ramasubramaniam, 2005). அதோடு காப்பிய நகர்வும் அங்குதான் ஆரம்பமாகிறது. இதே கருத்தை கவிஞர் வாலிக் குறிப்பிடுகையில்,

"கடைசியில்

கலங்கா திருந்த

கைகேயி என்னும் பொய்கை

கூனி

கல்மேல் கல்லெறியக்

கலங்கிப் போயிற்று

சொல்புத்தி கேட்டு சுயபுத்தி

கெட்டது

விரியாத கட்டடம் விரிசல்

விட்டது

கைகேயி கூனியின்

கைக்குழந்தை ஆனாள்!"

என்று பதிவு செய்துள்ளார் (Ramasubramaniam, 2005). மந்தரையின் ஆளுமைத் தன்மையினால் கம்பராமாயாண காப்பிய கதை நகர்விற்கான முக்கியமான முதல் காதாப்பாத்திரமாக மந்தரைத் திகழ்வதையும், அவளின் ஆளுமைத் தன்மையையும் அறியமுடிகிறது.

## கைகேயியின் ஆளுமை

கம்பராமாயணம் கதையின் திருப்புமுனையாக இருக்கக்கூடிய இடம் இராமன் 14 ஆண்டுகள் வனவாசம் சென்றதுதான். அங்ஙனம் இராமன் வனவாசம் செல்வதற்கு முழுமுதல் காரணமாகத் திகழ்பவள் கைகேயிதான். கைகேயின் ஆளுமைத் தன்மையே தசரதனிடம் இருந்து வரத்தைப் பெற்றதற்கும், இராமனை வனவாசம் அனுப்பியமைக்கும் காரணங்களாகும். சிந்தனை, உணர்வு, நடத்தை என்ற மூன்று நிலையிலும் சீரான ஒழுங்கமைந்த இயங்கியல் தன்மையுடன் செயல்பட்டு தான் நினைத்ததைச் சாதித்துக் காட்டுகிறாள்.

பொதுவாகப் பெண்கள் கணவன் மகிர்ச்சியாக இருக்கின்ற நேரத்தில் தனக்கு வெண்டியதைக் கேட்டு நிறைவேற்றிக் கொள்வார்கள். ஆனால் கைகேயியோ தன் கணவன் மகிழ்ச்சியாக இருக்கின்ற இந்த நேரத்தில் தான் நினைத்ததை சாதித்துக் கொள்ள முடியாது என்று உணர்ந்திருக்கிறாள். அதனால் தசரதனின் மகிழ்ச்சியான தருணத்தை மாற்றுவதற்கான வழிகளில் தனது செயலைத் துவங்குகிறாள். தசரதன் இராமனுக்கு முடிசூட்டு விழா என்ற நற்செய்தியை சொல்ல வருவதை அறிந்த கைகேயி அவன் வரும்போது அவனுடைய மனநிலையை மாற்றும் வகையில் அலங்கோலமாக தரையில் வீழ்ந்திருக்கிறாள்.

"அன்னது கண்ட அலங்கல் மன்னன், அஞ்சி

என்னை நிகழ்ந்தது? இஞ்ஞாலம் ஏழில் வாழ்வார்

உன்னை இகழ்ந்தவர் மாள்வர்! உற்றது எல்லாம்

சொன்னபின் என் செயல் காண்டி! சொல்லிடு என்றாள்"

மற்ற மனைவியரைக் காட்டிலும் தான் அதிகமாக நேசிக்கும் கைகேயின் அரண்மனைக்கு மிகவும் மகிழ்ச்சியாக வந்த தசரதன் அவள் இருந்த கோலத்தைப் பார்த்ததும் துடித்துப் போய் "உனக்கு என்ன நடந்தது" என்று மனதில் பயம் ஆட்கொள்ள கேட்கிறான் (Ramasubramaniam, 2005).

அவள் நினைத்தபடியே தசரதனின் மனநிலையானது மகிழ்ச்சியிலிருந்து மாறி அஞ்சிய மனநிலைக்குத் தள்ளப்பட்டது. இது தான் சமயம் என்று எண்ணிய கைகேயி தசரதனிடம்.

"ஏய வரங்கள் இரண்டின் ஒன்றினால் என்

சேய் அரசு ஆள்வது சீதை கேள்வன், ஒன்றால்

போய் வனம் ஆள்வது எனப் புகன்று நின்றாள்

பரதனுக்கு முடிசூட்டவும் இராமனைக் காட்டிற்கு அனுப்பவும் என்று அந்த இரண்டு வரங்களைக் கேட்கிறாள் (Parameshwari, 1998). இராமன் வனம் செல்லவில்லை என்றால் இராமாயணக் காவியமே இல்லை. இராமன் இராவணவதம் நிகழ்த்தவில்லை எனில் அதர்மச் செயல்களில் ஈடுபடுபவர்களுக்கான எல்லை வரையறைச் செய்யப்பட்ருக்கமாட்டாது. இந்த இரண்டையும் மையமாகக் கொண்டு கம்பராமாயணக் காவியம் நகர்கிறது. இவ்வகையில், கதை நகர்வதற்கு

துணைநிற்பவள் தான் என்கிற தன்முனைப்புடன் செயல்படக்கூடிய கைகேயியின் ஆளுமைத்தன்மையே ஆகும்.

## சூர்ப்பணகையின் ஆளுமைத்திறம்

சூர்ப்பணகை என்ற பெயருக்கு 'முறம் போன்ற நகங்ளை உடையவள்' என்றும் 'குருதி நிறைந்த பாண்டம்' என்றும் 'வேள்வியை அழிப்பவள்' என்றும் பொருள் சுட்டப்படுகிறது.

'சூர்ப்பம்- நகம் எனப் பிரிந்து 'முறம் போன்ற நகம் உள்ளவள்' என்று காரணப் பொருள்படும் அன்றி, சூர்ப்பம் - இரத்தம் நிறைந்த பாத்திரம், நகா - யாகம் முதலிய நற்கருமங்களைக் கெடுப்பவள். இரத்தத்தைப் பாத்திரங்களில் கொண்டு வந்து வேள்வியின் மேற் சொரிந்து அதனைத் தூய்மையற்றதாக்கி அழிப்பவள்" விளக்கம் தருகின்றார் (Ramasubramaniam, 2005).

"இளமையிலேயெ கணவனைத் துறந்தவளாதலாலும் ஜனஸ்தான மென்னும் இடத்திலிருந்து கொண்டு விருப்பப்படி திரிந்து இன்பம் அநுபவித்து வந்தவளாதலாலும் இராமனைக் கண்டவுடன் அவன் மீது மோகங்டிகாள்ளுகின்றாள். வயதில் மூத்த கிழத்தன்மை தட்டும் நிலையிலிருந்தாலும் இளமை துளிர்க்கும். இராமனை அடைந்து இன்பந்துய்க்க நினைக்கின்ற" 9 தன்மை உடையவளாக சூர்ப்பணகை அறிமுகம் செய்யப்படுகின்றாள்.

இராமனிடம் சூர்ப்பணகைக்கு ஏற்பட்டது அன்பில் நீங்கிய அறமற்ற காமமாகும். இதில் தன்னலமும் மிகுந்துள்ளது. அறத்திற்கு மாறாகச் சூர்ப்பணகை தன் வாழ்வுக்காக ஏங்கும் ஏக்கமே அவளிடம் மிகுதியாகக்க காணப்படுவது.

"நின்றில ளவனைச் சேரு நெறியினை நிறைந்து போனாள்

இன்றிவ னாகம் புல்லே னெனினுயிரிர்ப்பெ னென்னாப்

பொன்றிணி சரளச்சோலைப் பளிங்கறைப் பொதும்பர்ப் புக்காள்"

என்ற பாடலில் இராமனைத் தழுவும் எண்ணம் நிறைவேறாவிடின் இறந்துவிடுவேன் என்பதாகக் கூறும் நிலையில் வெளிப்படுகிறது (Ramasubramaniam, 2005). இதை எண்ணத்தின் உச்சம்,

"அழிந்த சிந்தைய ளாயயர் வாள்வயின்

மொழிந்த காமக் கடுங்கனள் மூண்டதால்

வழிந்த நாகத்தின் வன்றொளை வாளெயிற்று

இழிந்த கார்விட மேறுவ தென்னவே"

என்ற பாடலில் வெளிப்பட்டுள்ளது (Selva ganapathi, 2005). இதில் பாம்பினது விடம் உடம்பில் ஏறியது போல சிந்தை அழிந்து மனம் ஒடுங்கிய அவனிடம் காமத் தீ ஏறியதாகவும். இதன் காரணமாக காமனையே தின்ன எண்ணுபவளாகவும் சூர்ப்பணகை காணப்படுகின்றாள்.

## இராவணனை சீதை மீது காதல் கொள்ளச் செய்தல்

மனம் ஒன்றை இழக்கும் நிலையில் மற்றொன்றைப் பற்ற முயல்கின்றது. இப்பற்றுதலானது இழந்த தன் பொருட்டாக ஈடுசெய்தலாக அமைகிறது. மனத்தின் மாறாத் தன்மை கொண்ட ஈடுசெய்தல் இல்லை என்றால் மனிதனுக்கு இறப்பு ஏற்படக் கூடும். மனிதர்கள் ஒன்றை மற்றொன்றின் மூலம் ஈடுசெய்வதன் மூலமே வாழ்கின்றனர். வாழ்க்கையில் பற்று நீங்கியவன் இறைவனைப் பற்றுவதும் ஈடுசெய்தல் தன்மையின்பாற்பட்டது ஆகும்.

இத்தன்மையைச் சூர்ப்பணகையிடமும் காணமுடிகிறது. அவள் முதலில் இராமன் மேல் காதல் கொள்கின்ற நிலை,

"வான்றனில் வரைந்ததோர் மாத ரோவியம்

போன்றனள் புலர்ந்தனள் புழுங்கு நெஞ்சினள்

தோன்றறன் சுடர்மணித் தோளினாட்டங்கள

ஊன்றினள் பறிக்கவொ ரூற்றம் டிபற்றிலன்"

என்ற பாடலில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது (Parameshwari, 1998). இதில் இராமன் மேல் காதல் கொண்ட சூப்பணகை அவன் தோளில் பதிந்த தன் கண்களை மீட்க வலிமையற்றவளாய் இருக்கின்றாள். மேலும், இக்காதல் உணர்வால் நலிந்த அவளின் உணர்வுகளை,

"நின்றன ளிருந்தவ டினழய மார்பகம்

ஒன்றுடிவ னன்டிறனி னமுத முண்ணினும்

பொன்றுவென் போக்கினி யரிது பொன்டிமனாச்

சென்டிறதிர் நிற்பதோர் செய்கை தேடுவாள்"

என்ற பாடலில் வெளிப்படுத்துகின்றாள் (Selva ganapathi, 2007). இதில் இராமனின் மார்பைத் தழுவும் ஆசை நிறைவேறாவிடில் அமிர்தம் உண்டாலும் இறந்திடுவதாக மொழிகின்றாள்

"சூர்ப்பணகையின் காதல் பொருந்தாக் காமம். உடல் நசையால் தினவால் அது எழுகிறது. தூன் விரும்பிய இராமன் கிடைக்காவிட்டால் இலக்குவன் கிடைத்தாலும் போதும் என்று எண்ணுகின்ற தினவே அக்காதலில் உண்டு"

இராமனாலும், இலக்குவனாலும், சூர்ப்பணகையின் ஆசை மறுக்கப்பட்ட நிலையில் சூர்ப்பணகையின் காதல் அவர்களின் மீதான வெறுப்பின் மூலம் ஈடுசெய்யப்படுகின்றது. இராம, இலகக்குவர் மீது ஏற்படும் வெறுப்பையே சீதை மீதான காதலாக இராவனனுக்குச் சூர்ப்பணகை ஏற்படுத்துகின்றாள். அதனை,

"இருவர் மானிடர் தாபத ரேந்திய

வரிவில் வாடகையர் மன்மதன் மேனியர்

தரும நீரர் தயரதன் காதலர்

செருவி னேரு நிருதரைத் தேடுவார்"

என்ற பாடலில் சூர்ப்பணகை இராவணனிடத்து சீதையின் அழகை வர்ணித்துக் கூறி இராவணனுக்கு சீதையின் மீது ஆசையை ஏற்படுத்தி இராம, இலக்குவரை அழிக்க முயற்ச்சிக்கின்றாள் (Selva ganapathi, 2007).

இந்திராணி முதலியோரினும் சீதை மிகச் சிறப்புடையவளாதலின் அவர்களைப் பெற்ற இந்திரன் முதலியோரினும் மூவுலகத்திலும் பெறுதற்கரிய இவளை நீ பெற்றதனால் உனக்கே மேன்மை என்று கூறி சூர்ப்பணகை இராவணன் மனதில் சீதை பற்றிய நினைப்பைக் கருக்கொள்ளச் செய்கிறாள். ஆதனை,

"இந்திரன் சசியைப் பெற்ற னிருமூன்று வதனத் தோன்றன்

தந்தையு முமையைப் பெற்றான் றாரைச் செங்கணானுஞ்

செந்திரு மகளைப் பெற்றான் சீதையைப் பெற்றதாய் நீயும்

அந்தாம் பார்க்கி னன்னம யவர்க்கிலை யுனக்கே யையா" (Vaali, 2005)

மேலும்,

மீன்கொண்ட கொடியி னார்க்கு விழாய்பரிந் துலகமேத்தத்

தேன்கொண்ட நறுமென் கூந்தற் சிற்றிடைச் சீதை யென்னும்

மான்கொண்டுண் டாட நீயுள் வால்வலி யுலகங் காண் பால்

யான் கொண்டாடும் வண்ண மிராமனைத் தருதியென்"

உனது வலிமையால் நீ சீதையையும், இராமனையும் கைவசப்படுத்திச் சீதையை உனக்கு உரியவளாக்கிக் கொண்டு இராமனை எனக்கு உரியவனாக்கு என வேண்டினாள் (Ramasubramaniam, 2005).

இராம, இலக்குவனால் மூக்கறுபட்டு அவமானப்படுத்தப்பட்ட பின்னரும் இராமனை அடையவேண்டும். என்ற சூர்ப்பணகையின் தன் முனைப்பு மாறா ஆளுமைத் தன்மையைக் காணமுடிகிறது. இராவணன் மனதிலும் சீதையின் நினைவை ஏற்படுத்தி காப்பிய நகர்விற்கு காரணமாகிறாள் சூர்ப்பணகை.

## முடிவுரை

கம்பராமாயணக் காப்பிய நகர்வில் மும்மணிகளாக (மந்தரை, கைகேயி, சூர்ப்பணகை) திகழக் கூடிய மூவரும் தத்தம் நிலைப்பாட்டில் உறுதியாக இருந்து தமது ஆளுமைத் தன்மையை நிலைநிறுத்துவதோடு, காப்பிய நகர்விற்கும் துணைபுரிகின்றனர் என்பதை இவ்ஆய்வின் வழி அறியமுடிகிறது.

## References

Adhithar, A.K. (2007) Kambar Kavinayam, Vaanathi Pathippagam, Chennai, India.

Parameshwari, T. (1998) Kamabaramayam, Vaanathi Pathippagam, Chennai, India.

Ramasubramaniam, V.T. (2005) Kambaramayanam Ayothiya Kaandam, Thirumagal Nilaiyam, Chennai, India.

Selva ganapathi, (2005) Kambain Penniyam, Vaanathi Pathippagam, Chennai, India.

Vaali, (2005) Avathara Purusan, Vaali Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License